**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 18.04.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மற்றும் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், புதுதில்லி (APEDA) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் உள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கீழ் இயங்கி வரும் பழஅறிவியல் துறை, புதுதில்லியில் உள்ள வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA), வணிகம் மற்றும் தொழில் அமைச்சகம், இந்திய அரசு ஆகியவற்றுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் 17.04.2023 அன்று கையெழுத்தானது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்ததின் மூலம் ஏற்றுமதிக்கு ஏற்ற வணிக திராட்சை வகைகளின் உற்பத்தி திறனை மேம்படுத்துதல் பற்றிய ஆராய்ச்சி பணிக்காக ரூ.97 லட்சம் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டுஆணையம் (APEDA) வழங்க உள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்திற்கிடையே பரஸ்பரமாக இணைந்து செயல்பட இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் உதவும் என்று பரிந்துரைத்தார்.

மேலும் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், பெங்களூருவின் பொது மேலாளர் திரு.ஆர்.ரவீந்திரா, அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்தார். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தமானது துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்களது முன்னிலையில், APEDA, சென்னையின் உதவி பொதுமேலாளர் திருமதி ஷோபனாகுமார், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர், முனைவர் இரா. தமிழ்வேந்தன், வேளாண் தோட்டக்கலை முதன்மையர் முனைவர் பெ.ஐரின் வேதமோனி, முதுநிலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் ந.செந்தில், வேளாண்மை முதன்மையர் முனைவர் ந.வெங்கடேச பழனிச்சாமி மற்றும் பழ அறிவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஐ. முத்துவேல் ஆகியோர் உடனிருக்கையில் கையொப்பம் இடப்பட்டது. இறுதியாக தோட்டக்கலை பேராசிரியர் முனைவர் ச.இந்துராணி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**